மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,கோயம்புத்தூர்.

கள்ளிப்பாளையம் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், கள்ளிப்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண்கள்:-**378/1B1A** (ம) **378/1B1B-**ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : **LANK8R91/2025**

அளவு : 1:400

வ


மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு
- (As Per Patta) : 4700.00 ச.மீ
- (As Per Document) : 1.16 ஏக்கர்
- (As Per FMB) : 1.178 ஏக்கர் (அ) 4769.00 ச.மீ
- (As Per Field) : 1.178 ஏக்கர் (அ) 4769.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 22

மனைப்பிரிவின் எல்லை(As Per FMB) :

மனைப்பிரிவின் எல்லை(As Per Field) :

நிலையிலுள்ள சாலை :



பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

உத்தேச மனைப்பிரிவு சாலை = 739.25 ச.மீ :

பூங்கா பரப்பு:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலை) X 10%

(4700.00 ச.மீ - 739.25 ச.மீ) X 10% = **396.08** ச.மீ

பூங்கா ஒதுக்கீடு அரசானை எண்.18 ந.தி. (ம) கு.வ.து. நாள்:04.02.2019-ன் படி TNCDBR-19-ல்விதி எண்:47(6)-ன் படி O.S.R-க்கு ஈடாக (396.08மீ) அரசுவழிகாட்டி மதிப்புத்தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் (ம) மின்பகிர்மானம்:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலை) X 0.5%

பொது உபயோகம் (தேவையானவை) = 19.80 ச.மீ (0.50%)

பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

பொது உபயோக ஒதுக்கீடு = 24.88 ச.மீ (0.63%) :

தமிழ்நாடு உற்பத்தி (ம) மின்பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மின் பகிர்மானம் ஒதுக்கீடு = 23.26 ச.மீ (0.59%) :

மூலை முடுக்கு:-

12.0மீ. வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ. X 1.50மீ. விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019-ன்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோக ஒதுக்கீடு உள்ளாட்சி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது (ம) அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020-ன்படி TANGEDCO ஒதுக்கீட்டினை TANGEDCO (அ) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. அரசாணை எண் : 181 வீ.வ (ம) ந.வ.து நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) மின்கம்பங்கள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் :141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆஜித்தப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சியில் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 60CM X 120CM அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
8. பிரஸ்தாப மனைப்பிரிவிற்கு இவ்வலுவகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
10. மனைப்பிரிவிலுள்ள மனை எண்:15-ல் அமையும் நிலையிலுள்ள இடிக்கப்பட வேண்டிய கட்டிடம் இடிக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

ம.வ/(கோ.உ.தி.கு) எண் :**676/2025**
திட்ட அனுமதி எண் :**788/2025** } இணையவழி ஒப்புதல்

Signature valid
Signed by: Joint Director
Location Coimbatore
Date:2025.11.07 15:23:00

Signature valid
Signed by: Village Panchayat President
Location Coimbatore
Date:2026.03.04 11:11:27

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (மு.கூ.பொ),
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.